**செய்தி வெளியீடு எண்: 543** **நாள்: 15.08.2018**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் சுதந்திர தின உரை - 15.8.2018

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி

மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர்
அண்ணன் டாக்டர் மு.தம்பிதுரை அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர்
அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
அண்ணன் திரு. ப.தனபால் அவர்களே!

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற
தலைமை நீதியரசர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற
மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர்
திருமதி. கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!

தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளே!
அரசு அலுவலர்களே!

காவல் துறை தலைமை இயக்குநர்
திரு. டி.கே.ராஜேந்திரன் அவர்களே!

காவல் துறை உயர் அதிகாரிகளே!
அலுவலர்களே! காவல் துறையினரே!
தரைப் படை, விமானப் படை, கடற் படை,

கடலோரப் பாதுகாப்பு மற்றும்
மத்திய பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளே!

போற்றுதற்குரிய சுதந்திரப் போராட்ட தியாகிகளே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! மாணவ, மாணவிகளே!
பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தினையும், இனிய 72வது சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்**
**தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்**

என்று தேசியக் கொடியின் மாண்பினைப் பற்றி
பாடினார் **மகாகவி பாரதியார்** அவர்கள்.
கம்பீரம் மிக்க நமது கொடியினை, இந்த
இனிய நாளில் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் இரண்டாவது முறையாக
ஏற்றியதை நான் பெருமையாக கருதுகிறேன்.

பல்லாயிரக் கணக்கான நமது
சுதந்திரப் போராட்ட வீரர்கள் தங்களது
உடமைகள் மற்றும் இன்னுயிரை ஈந்து
பல வருடங்கள் பாடுபட்டதன் விளைவாக
பெறப்பட்டது **நமது சுதந்திரம்.**

இந்திய திருநாட்டின் சுதந்திரத்திற்காக
தங்கள் இன்னுயிரை துச்சமென மதித்து,
உயிர் தியாகம் செய்த தியாகச் செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம் நமது தமிழ்நாடு.

நமது **தேசத் தந்தை மகாத்மா காந்தி** அவர்கள்
காட்டிய **அகிம்சை வழியிலேயே** அடிமை விலங்கை தகர்த்தெறிந்த **தியாகச் செம்மல்கள்** வாழ்ந்த இடம் என்ற பெருமையைப் பெற்றது **நமது தமிழ்நாடு.**

தொடக்கத்தில் ஆயுதம் ஏந்திய போர் தான்,
காந்தியடிகளுக்குப் பின்னால் அறப்போராக
மாறியது. ஆயுதப் போரிலும், அறப் போரிலும்
அதிக பங்கு வகித்தது நமது தமிழ்நாடு தான்

என்று சொல்லிக் கொள்வதில்
நாம் பெருமை கொள்ளலாம்.

**இந்த வரலாற்று நாயகர்களை**
**நாம் என்றென்றும் போற்றி வணங்க வேண்டும்.**

வட இந்தியாவில் நடந்த **சிப்பாய்ப் புரட்சி தான்**
இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்பது வரலாறு.
ஆனால், அதற்கு முன்பே கிட்டத்தட்ட
அதே காரணங்களுக்காக வெள்ளையர்களுக்கு எதிராக வேலூரில் **1806 ஆம் ஆண்டு**
**ஜூலை 10 ஆம்** நாள் ஓர் புரட்சி நடந்தது. ஆகவே, **இந்திய சுதந்திர போராட்டத்திற்கான வேள்வி,**
**தமிழ்நாட்டில்தான் ஆரம்பித்தது** என்பதை எண்ணி
நாம் பெருமை கொள்ளலாம்.

மருது சகோதரர்கள், மாவீரன் தீரன் சின்னமலை,
வெள்ளையத் தேவன், வீரன் பூலிதேவன்,
வீரபாண்டிய கட்டபொம்மன்,
வீரன் அழகு முத்துக்கோன், வ.உ.சிதம்பரனார்,
திருப்பூர் குமரன், வேலு நாச்சியார், வீரத்தாய் குயிலி, கோபால நாயக்கர்,
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்,
தியாகி சீனிவாச ராவ், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், தியாகி விஸ்வநாத தாஸ்,
கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், **ரிபல்** முத்துராமலிங்க சேதுபதி,
வா.வே.சு.அய்யர், செண்பகராமன், தில்லையாடி வள்ளியம்மை,,
வீரர் சுந்தரலிங்கம், சுப்பிரமணிய சிவா, மூதறிஞர் ராஜாஜி, தீரர் சத்தியமூர்த்தி, தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர்,
போன்றோரும்,

தங்களது பாடல்கள் மூலம்
சுதந்திர வேட்கையை தூண்டிய
மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன்,
நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் போன்ற
தமிழ்நாட்டைச் சேர்ந்த எண்ணற்ற தலைவர்களும், பொது மக்களும் இந்திய விடுதலைக்காக எண்ணிலடங்கா தியாகங்களை செய்ததுடன், சுதந்திர உணர்வையும் பரப்பினர்.

நாம் பெற்ற சுதந்திரத்திற்காக இன்னுயிர் நீத்த
வீரத் தியாகிகளின் தியாகத்தினை, நாம் அனைவரும் நினைத்துப் போற்றிட வேண்டும். அவர்கள் செய்த தியாகத்தினையும், அவர்களின் பெருமையையும்,

நாம் அடுத்த தலைமுறையினருக்கு
எடுத்துச் சொல்ல வேண்டும். எனவே தான்
இவர்களின் தியாகங்களைப் போற்றிடும் வகையில்,
தமிழ்நாடு அரசு இவர்களுக்கு மணி மண்டபங்களையும், அரசின் சார்பில் விழாக்களும், முக்கிய இடங்களில் சிலைகளையும் நிறுவியுள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்,
அவர்களின் குடும்பத்தாருக்கும்,
**விடுதலை போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம், மருத்துவ வசதி, கட்டணமில்லா பேருந்து வசதி, வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை, வீடுகள் ஒதுக்கீடு**
போன்ற பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

சுதந்திரம் அடைந்து கடந்த 71 ஆண்டுகளில்
நாம் நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகவும்,
நமது மக்களின் நல்வாழ்விற்காகவும்,
ஆற்றிய பணிகளை திரும்பிப் பார்க்கின்ற நேரம் இது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து
இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த
**22 ஆயிரத்து 439 கோடியே 92 லட்சம்**
**ரூபாய் மதிப்பிலான 41,031 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும்,**

**16 ஆயிரத்து 681 கோடியே 84 லட்சம் ரூபாய்** மதிப்பீட்டிலான **7 ஆயிரத்து 596 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும்** உள்ளேன்.

**“எல்லோரும் எல்லாமும் பெற்று,**
**வாழ்வில் வளம் பெறும் வகையிலான**
**ஆட்சி அமைவதே சிறந்த மக்களாட்சி ஆகும்.**
**இவ்வாறான மக்களாட்சியில் தான் ஏழைகளும்,**
**வசதி படைத்தோருக்கு இணையான வசதிகளை**
**பெற இயலும்” என்றார் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.”**

மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னது மட்டுமின்றி, செயலிலும் செய்து காட்டினார்கள்.
அவர்கள் வழிவந்த மாண்புமிகு அம்மாவின் அரசும்,
மக்களின் நலனைக் காக்க பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவும்,
தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு, இறுதி வரை தனக்கென வாழாமல்
தமிழ்நாட்டு மக்களுக்காகவே உழைத்த
மாண்புமிகு அம்மா அவர்களுக்கு,
மெரினா கடற்கரையில் **நினைவு மண்டபமும்,**
அவர் வாழ்ந்த இல்லத்தை மக்கள் பார்வையிடுவதற்காக **நினைவு இல்லமாக** மாற்றவும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது.

**சோழ வளநாடு சோறுடைத்து** எனும்
**பெரும் மொழியை** நனவாக்கும் விதமாக, இவ்வருடம் தமிழ்நாட்டின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களாலும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசாலும் நடத்தப்பட்ட சட்டப் போராட்டத்தின் விளைவாக,

**காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும்**
**காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டது.**
**இந்த வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பினை**
**மாண்புமிகு அம்மாவின் அரசு பெற்றுத் தந்தது.**
காவேரி நீர் மேலாண்மை ஆணையம் எடுத்த முடிவின்படி ஜூன் மாதம் நமக்கு வர வேண்டிய
**9.19** டி.எம்.சி. அடி தண்ணீர் கிடைக்கப் பெற்றது.

ஜூலை மாதத்திற்கு கிடைக்க வேண்டிய
நீரின் அளவு **31.24** டி.எம்.சி. அடி தண்ணீர்.
ஆனால் ஜூலை மாதம் இயற்கை அன்னையின் அருளால் **தென்மேற்கு பருவ மழை** அதிக அளவில் பொழிந்ததன் காரணமாக, **1 லட்சம் கன அடிக்கும் அதிகமான நீர்** மேட்டூர் அணைக்கு வந்து,
**5 ஆண்டுகளுக்குப் பிறகு அணை தனது**
**முழு கொள்ளளவினை இரண்டு முறை எட்டியுள்ளது.**

**ஜூலை மாதம் 19 ஆம் நாளன்று**
**டெல்டா மாவட்டத்தில் உள்ள நிலங்கள்**
**பாசன வசதி பெறுவதற்காக,**
**மேட்டூர் அணை என்னால் திறக்கப்பட்டது.**

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த
மாண்புமிகு அம்மாவின் அரசு, அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது.

அதனை நிறைவேற்றும் வகையில், 2018–19ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில்,
பள்ளிக் கல்வித் துறைக்கு மிக அதிக அளவு ஒதுக்கீடாக **27ஆயிரத்து 205 கோடியே**
**88 லட்சம்** ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதே
இதற்கு சான்றாகும்.

பள்ளி மாணவச் செல்வங்கள் தங்கள் வாழ்க்கையில் சிறந்து விளங்க மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திய பல நலத்திட்டங்களை, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் இந்த அரசும் தொடர்ந்து செயல்படுத்தி, பள்ளிக் கல்வித்துறையில் தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது.

உயர் கல்வித் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள்
65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கினார்கள். அதற்கு பின்பு அம்மாவின் வழியில் செயல்படும் இந்த அரசு கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியுள்ளது.

அதன் விளைவாக உயர்கல்வி சேர்க்கையில் மாணவர்களின் எண்ணிக்கை, இன்றைய தினம்
**48.6 சதவீதமாக** உயர்ந்து இந்தியாவிலேயே **தமிழ்நாடு முதன்மை மாநிலமாக** உள்ளது என்பதே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் நடைபெறும் இந்த அரசு எடுத்த முயற்சிகளுக்கு கட்டியம் கூறுகிறது.

நான் விவசாய குடும்பத்தில் பிறந்து,
ஒரு விவசாயியாக வாழ்ந்து வருபவன் என்பதை
பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்த அரசு விவசாயிகளின் நலன் காக்கும் அரசு. விவசாயிகள் வாழ்வில் ஒளி ஏற்றிடச் செய்ய
இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் **இரண்டாம் பசுமை புரட்சி** ஏற்படுத்த
அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக,
2011–12 முதல் 2017–18 ஆண்டு வரையிலான காலத்தில் **உணவு தானிய உற்பத்தி** ஐந்து முறை
100 லட்சம் மெட்ரிக் டன்னை கடந்து
சாதனை படைத்துள்ளது.

டெல்டா விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கும் வகையில் 115 கோடியே 67 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் **குறுவை தொகுப்பு திட்டம்** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

802 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
**மானாவாரி சிறப்பு தொகுப்புத் திட்டம்** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கூட்டுப் பண்ணைய முறையை** ஊக்குவிக்க
100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் –
**2 லட்சம் சிறு, குறு விவசாயிகளை**
ஒருங்கிணைத்து **கூட்டுப் பண்ணையத் திட்டம்** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்
2016–17 ஆம் ஆண்டில் 31 லட்சத்து 85 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட
**பயிர்கள் காப்பீடு** செய்யப்பட்டுள்ளன.

முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு
இந்த திட்டத்தின் கீழ் 3,457 கோடி ரூபாய் காப்பீட்டு நிறுவனங்களால்
ஒப்பளிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தென்னை விவசாயிகளின் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில்
தென்னையிலிருந்து
“**நீரா பானம்**” உற்பத்தி செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசால் அனுமதி
வழங்கப்பட்டு, அவர்களின் வருமானம் இருமடங்காக உயர்த்த
நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு மக்களின் குடிநீர் தேவையை
பூர்த்தி செய்ய **1,824 கோடியே 20 லட்சம் ரூபாய்** மதிப்பீட்டில் மாநிலத்தின்
பல்வேறு இடங்களில்
**குடிநீர் திட்டப் பணிகளை** செயல்படுத்தி வருகின்றது.

நீர்வள ஆதாரங்களைப் பாதுகாக்க பாரம்பரிய
நீர் மேலாண்மை முறையான **குடிமராமத்து முறைக்கு** புத்துயிரூட்டி, 2016–17ஆம் ஆண்டு முதல் அதனை
ஓர் இயக்கமாக இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

2018–19ஆம் ஆண்டில் குடிமராமத்து திட்டம்
328 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பணிகளை மேற்பார்வையிட இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் கண்காணிப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகளில் படிந்துள்ள களிமண், வண்டல், சவுடு மற்றும் சரளை மண்ணை, மண்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு கட்டணமின்றி வழங்கும் திட்டம் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தினால், மேட்டூர் அணையில்
83 ஆண்டுகளுக்கு பிறகு 28.5.2017 அன்று
தூர் வாரும் பணி என்னால் நேரடியாக துவக்கி வைக்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகளிலிருந்து 6 கோடியே 51 லட்சத்து
65 ஆயிரம் கன மீட்டர் வண்டல் படிவுகள்,
5 லட்சத்து 83 ஆயிரத்து 539 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர்–திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் பயன் பெறும் வகையில் **அத்திக்கடவு–அவிநாசி** திட்டம் 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிதியிலேயே செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, கடலூர் மற்றும்
நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆதனூர்–குமாரமங்கலம்
கிராமங்களுக்கு இடையே கதவணை ஒன்று
400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்,**
745 கோடியே 49 லட்சம் ரூபாயில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் நீர்வளத் துறையின் கீழ் உள்ள
69 அணைகளும் மின் உற்பத்தி பகிர்மான கழகத்தின் கீழ் உள்ள 20 அணைகளும் பயன் பெறும்.

தமிழ்நாட்டில் சாதி, மதம், மொழி, இனம் மறந்து
அனைவரும் சகோதர, சகோதரிகளாக
ஒரு குடும்பம்போல் வாழ்ந்து வருகின்றனர். மதச்சார்பின்மையை பின்பற்றும் ஒரு உன்னத மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனித பயணத்தை மேற்கொள்வதற்காக
மாண்புமிகு இதயதெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, இந்த ஆண்டு முதல்
ஒவ்வொரு ஆண்டும் **6** கோடி ரூபாய் மானியம்
வழங்க ஆணையிட்டுள்ளது. இந்த திட்டத்தின்
மூலம் **3,780 நபர்கள் இந்த ஆண்டு மட்டும்**
**பயன் பெற்றுள்ளனர்** என்பதை இந்த நேரத்தில்
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் பணிபுரியும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த
பெண்களுக்காக, **வக்ஃப்** வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் மகளிர் விடுதி ஒன்று
அரசு நிதியுதவியுடன் கட்டப்பட உள்ளது.

**ஜெருசலேம் புனித பயணம்** மேற்கொள்ளும்
கிறிஸ்துவ பயணிகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு முதல் **500**லிருந்து
**600**ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஜூலை மாதம் இறுதிவரை **1** கோடியே **96** லட்சத்து **94** ஆயிரத்து
**132 புதிய மின்னணு குடும்ப அட்டைகள்** வழங்கப்பட்டுள்ளன.

இயற்கை வளங்களை எதிர்வரும் சந்ததியினருக்கு
நல்ல முறையில் விட்டுச் செல்வது நம் அனைவரின் கடமை என்பதை கருத்தில் கொண்டு,
**1.1.2019 முதல் தமிழ்நாட்டில்,**
**ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும்**
**பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை**
**தடை செய்து மாண்புமிகு அம்மாவின் அரசு**
**ஆணை வெளியிட்டுள்ளது.**
இதனை வெற்றிகரமாக செயல்படுத்த, பொது மக்கள், வணிகர்கள் என
அனைவரின் ஒத்துழைப்பையும்
நான் இந்த தருணத்தில் கோருகிறேன்.

அரசின் நோக்கங்களையும், நலத் திட்டங்களையும் பொதுமக்களிடம் கொண்டு செல்வதில்
அரசு ஊழியர்களின் பணி இன்றியமையாதது.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்களுக்கு
**மத்திய அரசு அறிவித்த 7வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் குறுகிய காலத்திலேயே அமல்படுத்தப்பட்டது.**

மேலும், அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நான்கு லட்சம் ரூபாயும், சில தீவிர சிகிச்சைகளுக்கு ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வரையும் மருத்துவக் காப்பீடு வழங்கப்படுகிறது.

**போக்குவரத்து தொழிலாளர்களின்** கோரிக்கையினை ஏற்று அவர்களுக்கு **ஊதிய உயர்வு** இந்த அரசால் அறிவிக்கப்பட்டது. அவர்களுக்கு ஊதிய உயர்வின் காரணமாக எழுந்த நிலுவைத் தொகையையும் இந்த அரசு வழங்கியுள்ளது.

அது மட்டுமன்றி, பல ஆண்டுகளாக போக்குவரத்துக் கழக **ஓய்வூதியதாரர்களுக்கு** வழங்கப்படாமல் இருந்த நிலுவைத் தொகையை வழங்குவதற்காக 2 ஆயிரத்து 247 கோடியே 39 லட்சம் ரூபாய் நிதியை தமிழ்நாடு அரசு வழங்கியது.

மக்களின் தேவை மற்றும் வசதிகளைக் கருத்தில் கொண்டு, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக வரலாற்றில் முதல் முறையாக கழிவறையுடன் கூடிய குளிர்சாதன படுக்கை வசதியுடன் கூடிய சொகுசு பேருந்துகள் மற்றும் பிற வகையிலான சொகுசு பேருந்துகள் சேவை கடந்த மாதம் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு,

சென்னையின் பல்வேறு முனையங்களை இணைக்கும் வகையில் **மெட்ரோ ரயில் திட்டத்தினை** செயல்படுத்தி வருகிறது. அதில் சின்னமலை முதல் ஏஜி–டி.எம்.எஸ். வரையிலான 4.35 கி.மீ. சுரங்க வழித்தடப் பகுதியில் மெட்ரோ ரயில் போக்குவரத்தை கடந்த மே மாதம் நான் துவக்கி வைத்துள்ளேன்.

இது தவிர, மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும், மாதவரம் முதல் கோயம்பேடு வரையிலுமான வழித் தடங்களுக்கு மெட்ரோ ரயில் திட்டத்தின் கட்டம்–II–ன் கீழ் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

ஜவுளி தொழிலின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் வகையில் பன்னாட்டு ஜவுளி கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் கோவையில் நடத்தப்பட உள்ளது.

மக்கள் அனைவருக்கும் சுகாதார சேவை

கிடைக்கும் வகையில், **முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்** செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கடந்த 7 ஆண்டுகளில் 4,880 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 27.80 லட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**கர்ப்பிணித் தாய்மார்கள் இறப்பு விகிதத்தில்**
2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய நிலையான வளர்ச்சி இலக்கினை 2016ஆம் ஆண்டிலேயே அடைந்த மூன்று மாநிலங்களில், நமது மாநிலமும் ஒன்றாக விளங்கி சாதனை படைத்து
மத்திய அரசின் விருதினை பெற்றுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறை மேம்பட இந்த அரசு
பல அளப்பறிய சாதனைகளை செய்துள்ளது.
அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு அம்மா அவர்களாலும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அரசினாலும் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத முயற்சியின் காரணமாக, மதுரை மாவட்டம்,
**தோப்பூரில்** சுமார் 1,500 கோடி ரூபாய் செலவில்
**எய்ம்ஸ் மருத்துவமனை** அமைக்கப்பட உள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கீகாரம் அற்ற மனைப் பிரிவுகளில் மனைகளை வாங்கிய ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு **கட்டட, மனை விற்பனை (முறைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்) சட்டம், 2016ஐ** தமிழ்நாடு அரசு முனைப்பாக செயல்படுத்துகிறது.

**குடிசைகளற்ற தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும்** என்ற மாண்புமிகு
புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
கனவை நனவாக்க இந்த அரசு தொடர்ந்து பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

இதன் அடிப்படையில், இந்த ஆண்டு,
**பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டத்தின் கீழ்,**
2,276 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 லட்சத்து
30 ஆயிரம் வீடுகளும், **முதலமைச்சரின் சூரிய ஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ்** 420 கோடி ரூபாய் செலவில்
20,000 வீடுகளும் கட்டப்படும் என்பதை
பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**‘அனைவருக்கும் வீட்டுவசதி’ என்ற**
**பிரதம மந்திரி வீட்டுவசதி**

திட்டத்தின் கீழ் நகர்புறங்களில் **16** ஆயிரத்து **776** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **4** லட்சத்து **25** ஆயிரம் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு ஆண்டில் இந்த திட்டத்திற்காக
இந்த அரசு **2** ஆயிரத்து **301** கோடியே
**30** லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை
மேம்படுத்தும் பொருட்டு, இந்த ஆண்டு முதல்
ஊரக உள்ளாட்சிகளுக்கு வழங்கும் பகிர்வு நிதியில்
ஆண்டுதோறும் **100** கோடி ரூபாய் தனியாக ஒதுக்கி
பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

'**அனைவருக்குமான வளர்ச்சி**' எனும் எண்ணத்தை ஈடேற்ற, அரசின்
அனைத்து சேவைகளையும்,
கிராம மக்களும் அடையும் வண்ணம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும்
**பாரத்நெட்—கிராம ஊராட்சிகளுக்கான இணைய சேவைத் திட்டம்** என்ற பெயரில் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்த தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் **மென்பொருள் ஏற்றுமதி** 2017—18ஆம் ஆண்டு **1 லட்சத்து 11 ஆயிரத்து 179 கோடியாக இருக்கும்** எனவும், **மென்பொருள் வல்லுநர்களின் எண்ணிக்கை 6 லட்சத்து 38 ஆயிரமாக** இருக்கும் எனவும்
மதிப்பிடப்பட்டுள்ளது.

குறைந்த செலவில், அதிக எண்ணிக்கையிலான சேனல்களை நல்ல தரத்துடன் மக்கள் பார்த்து மகிழும் வண்ணம், **தமிழ்நாடு அரசு கேபிள் டிவி** நிறுவனத்தால் **23** லட்சத்து **99** ஆயிரம் செட்டாப் பாக்ஸ்கள் விலையின்றி வழங்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. மேலும் **உயர்வரையறை** தரத்திலான **(H.D) செட்டாப் பாக்ஸ்கள்** சந்தாதாரர்களுக்கு
வழங்கப்பட்டு வருகிறது.

**"ஒகி"** புயலின்போது தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளும் திறம்பட பணியாற்றியதன் விளைவாக மக்கள் விரைவாக இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினார்கள்.

மீனவ நண்பனாக செயல்படும் மாண்புமிகு
அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசின்
இடைவிடாத முயற்சி மற்றும் உறுதியான நடவடிக்கைகள் காரணமாக,
தமிழ்நாட்டைச்

சார்ந்த **460 மீனவர்களும்**, அவர்களின் **26 மீன்பிடி படகுகளும்** இலங்கை சிறைகளிலிருந்தும்,
**46 மீனவர்கள்** ஈரான் சிறைகளிலிருந்தும்,
**10 மீனவர்கள்** ஓமன் நாட்டு சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, தமிழ்நாடு திரும்பியுள்ளனர்.

2016–ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் அறிக்கையில், உழைக்கும் மகளிருக்கு **மானிய விலையில் இருசக்கர வாகனம்** வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பை நனவாக்கும் வண்ணம்,
இந்த திட்டம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளான 24.2.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் நாளது வரை
16 ஆயிரத்து 903 மகளிருக்கு 36 கோடியே
69 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்**
**தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு**

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.
இதனை மெய்ப்பிக்கும் வகையில், அமெரிக்காவில் உள்ள **ஆர்வர்டு பல்கலைக்கழகத்தில்**
**தமிழ் இருக்கை** அமைக்க தமிழ்நாடு அரசின் சார்பில்
10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையிலும் தமிழ்நாடு தனது
முத்திரையை பதித்துள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு **சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப்** பெற்றுள்ளது என மத்திய அரசின் சுற்றுலாத் துறை அறிவித்துள்ளது.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில்
2013ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை, தொடர்ந்து 5 ஆண்டுகளாகவும்,

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 2014ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 4 ஆண்டுகளாகவும்,

தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தை
பெற்று வந்துள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2017ஆம் ஆண்டில் மட்டும் **34 கோடியே 50 லட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும்,**
**48 லட்சத்து 60 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும்** தமிழ்நாட்டிற்கு வந்து சென்றுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் பொழுது, தமிழ்நாடு மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்தது.

மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளினால், தற்போது **மின்மிகை மாநிலமாக** திகழ்கின்றது. மத்திய மின்சார ஆணையம் வெளியிட்டுள்ள 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டிற்கான **மின்தேவை – மின் உற்பத்தி சமன்பாட்டு அறிக்கையில்** இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேலும் கடந்த ஆண்டுகள் போலவே, மாண்புமிகு அம்மாவின் வழியில் நடைபெறும் இந்த அரசின் நிர்வாகத் திறமையினால், தற்போதும் தமிழ்நாடு தொடர்ந்து மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருகிறது.**

எரிசக்தித் துறையில் மாண்புமிகு அம்மா
அவர்கள் செயல்படுத்திய பல்வேறு
அரிய நடவடிக்கைகளின் காரணமாக,
**புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க**
**எரிசக்தி நிறுவுதிறன், 11,113 மெகாவாட்** என்ற
**உயர்ந்தபட்ச அளவை 31.3.2018 அன்று எட்டி,**
**நாட்டிலேயே முதலிடத்தை பெற்றுள்ளது** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு கொண்டு வரும் திட்டங்கள் நல்ல முறையில்
செயல்படுத்தப்பட்டு, மாநிலம் பொருளாதாரத்தில்
வளர்ச்சியடைய வேண்டுமெனில்,

நம் நாட்டு தொழில் முனைவோர்களும்,
பன்னாட்டு நிறுவனங்களும்
மாநிலத்தில் முதலீடு செய்து
தொழில் துவங்க முன்வர வேண்டும் என்றால்,
**மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு**
**நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு,**
**பொது அமைதி நிலவ வேண்டும்.**

இதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், தொடர்ந்து சட்டம் ஒழுங்கு பராமரிப்புக்கு உரிய முக்கியத்துவம் அளித்து, காவல் துறையினர் எவ்வித குறுக்கீடும் இன்றி, சுதந்திரமாக தங்கள் பணிகளை நேர்மையாகவும், செம்மையாகவும் மேற்கொள்ள முன்னுரிமை அளித்து, சரியான சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்து, அவர்களுக்கு தேவையான நவீன வசதிகள் செய்து கொடுத்தார்கள்.

இதன் மூலம், "**அமைதி, வளம், வளர்ச்சி**'' என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கோட்பாடுகளில் **அமைதி எனும் முதல்** கோட்பாட்டை நாம் நிலைநிறுத்தி,

**வளம் மற்றும் வளர்ச்சி** என்ற கோட்பாடுகளை மாண்புமிகு அம்மாவின் வழி நின்று,

**வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை** நிறைவேற்றுவதன் மூலம், மாண்புமிகு அம்மா அவர்களின் ''**தொலைநோக்குத் திட்டம் 2023**''ஐ நாம் குறித்த காலத்தில் அடையலாம்.

''**ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்**''
என்றார் மகாகவி பாரதியார் அவர்கள்.

பாரதியின் கனவை நனவாக்கும் விதத்தில் தமிழ்நாட்டில் தொழிற் புரட்சி ஏற்படுத்தி மாண்புமிகு அம்மாவின் **தொலை நோக்கு பார்வை 2023ஐ** முழுமையாக வெற்றி பெற அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வரும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **இரண்டாவது உலக முதலீட்டாளர் சந்திப்பு** நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இச்சந்திப்பு நடத்துவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதை எளிமையாக்குவதன் ஒரு பகுதியாக ''**ஒருங்கிணைந்த இணையதள வழி ஒற்றைச்சாளர தகவு**'' ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 11 அரசுத் துறைகளிலிருந்து
தொழில் நிறுவனங்களுக்கு தேவையான
பல்வேறு அனுமதிகள் பெறுதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய சேவைகளை பெற இயலும்.

கடந்த மாதம் மாண்புமிகு அம்மாவின் அரசு
**"சியட்"** நிறுவனத்துடன் செய்து கொண்ட
புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி,
4,000 கோடி ரூபாய் செலவில் ஒரு டயர் உற்பத்தி தொழிற்சாலை காஞ்சிபுரம் மாவட்டம்,
ஸ்ரீபெரும்புதூரில் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

மனித ஆற்றல் மற்றும் இயற்கை வளங்களை
தன்னகத்தே கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதால், தமிழ்நாடு இந்தியாவிலேயே
**இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக** விளங்குகிறது. மேலும்,
**தொழிற்சாலைகளின் எண்ணிக்கை** மற்றும் **பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையின்** அடிப்படையில் முறையே
**16 மற்றும் 16.24 சதவீத பங்களிப்புடன்**
**நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம்** வகிக்கிறது.

சமீபத்தில் நாடாளுமன்றத்தில்
**அன்னிய நேரடி முதலீடு** பற்றிய ரிசர்வ் வங்கியின் அறிக்கை
சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டுகளைவிட
2017–18 ஆம் ஆண்டு 56 சதவீதம்
கூடுதல் முதலீடு பெறப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில்,
**தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆய்வு நிறுவனம்**
21 மாநிலங்களில் நடத்திய ஆய்வின் முடிவில், **2018ஆம் ஆண்டில் தொழில் முதலீட்டிற்கு சிறந்த மாநிலமாக** தில்லிக்கு அடுத்து
**இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது.**

**2017ஆம் ஆண்டு ஆய்வில், ஆறாம் இடத்தில் இருந்த**
**தமிழ்நாடு, 2018ல், நான்கு இடங்கள் முன்னேறி**
**இரண்டாம் இடம் பிடித்துள்ளது.**

இது தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாட்டினை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. **இந்த ஆய்வில், நிர்வாகத் திறன், அரசியல் ஸ்திரத்தன்மை, சிறந்த தொழிலாளர்கள் ஆகிய இனங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பீடுநடை போடுகிறது, என்பதையே இந்த அறிக்கைகள் உறுதி செய்கின்றன.

தமிழ்நாட்டில் புதிய சாலைகள் மற்றும் பாலங்களை உருவாக்கிடவும், இருக்கின்ற சாலைகளை அகலப்படுத்துதல் போன்ற பணிகளுக்காகவும்,

தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்களின் மேம்பாட்டிற்காகவும் ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பெங்களூருவைச் சேர்ந்த '**பொது விவகாரங்கள் மையம்**' என்ற ஒரு அமைப்பு சமூக பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில், மாநிலத்தின் குழந்தைகள் வளர்ச்சி விகிதம், சட்டம்–ஒழுங்கு, நீதி வழங்குதல், பொருளாதார சுதந்திரம், சுற்றுச்சூழல், அத்தியாவசிய உட்கட்டமைப்பு, நிதி மேலாண்மை, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட 10 அடிப்படை தலைப்புகளின் கீழ் நூறு காரணிகளைக் கொண்டு மாநில அரசின் செயல்பாடுகளை தர மதிப்பீட்டுடன் வெளியிட்டுள்ளது.

இதன் 2018–ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், **ஆளுமையில் இரண்டாவது சிறந்த மாநிலமாக தமிழ்நாடு** திகழ்கிறது என்று கூறப்பட்டுள்ளது.
இது மாநில அரசின் நிர்வாகத் திறமைக்கு வழங்கப்பட்ட சான்றாகும்.

மாண்புமிகு அம்மாவின் நோக்கத்தினை நிறைவேற்றிடும் வகையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உயர்த்திட மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
மனிதனின் அடிப்படைத் தேவைகளான

குடிநீர், உணவு, கல்வி, குடியிருப்பு, சுகாதாரம், மின்சாரம், தொழில், வேளாண்மை, நீர்மேலாண்மை, வேலைவாய்ப்பு, பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகிய அனைத்தும் கிடைத்தலே உண்மையான சுதந்திரமாகும்.
அந்த வகையில், மேற்சொன்ன அனைத்தையும் வழங்கி, தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது என்பதை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு,
விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து,
பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை
ஊக்குவிக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட
விளையாட்டு கூட்டமைப்புகள் நடத்தும்

- தேசிய அளவிலான முதுநிலைப் போட்டிகளில்,

தமிழ்நாட்டின் சார்பில் பங்கேற்று தங்கம்,
வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கம் வென்றாலோ;

- நமது மாநிலம் சார்பாக நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டு தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கம் வென்றாலோ;

- அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கம் வென்றாலோ; அல்லது நமது நாட்டின் சார்பாக கலந்து கொண்டால் கூட,

அவர்களுக்கு தமிழ்நாடு அரசு அல்லது
தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில்,
குறிப்பிட்ட பதவிகளில், தகுதியின் அடிப்படையில்
2% வரை உள்ஒதுக்கீடாக வேலை வாய்ப்பு
வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**தலைமைச் செயலாளர் தலைமையில்**
**ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு,**
**விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு**
**இது நடைமுறைபடுத்தப்படும் என்பதை**
**மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக
தனது இன்னுயிரை துச்சமென மதித்து,

உயிர் தியாகம் செய்த தியாகச் செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம் நம் தமிழ்நாடு.

நாட்டின் விடுதலைக்காக தனது
வாழ்நாளை அர்ப்பணித்த தியாகச் செம்மல்களை சிறப்பிக்கும் வகையில்
தற்போது அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் **ஓய்வூதியம்
13,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக
உயர்த்தப்படும் என்பதையும்,**

- ❖ சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் **குடும்ப ஓய்வூதியம் 6,500 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாக உயர்த்தப்படும்** என்பதையும்,

- ❖ விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு, நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றியவர்களின் தியாகத்தை போற்றும் வகையில் அவர்களது **வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் 6,500 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்** என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நமது சுதந்திர போராட்ட வீரர்கள்
போராடி பெற்ற இந்த சுதந்திர திருநாட்டை
எல்லா வகையிலும் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு இணையாக உயர்த்தவும்,**

**குறிப்பாக தமிழ்நாட்டை
இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்திட
தொடர்ந்து பாடுபடுவோம் என்று
இந்த நன்னாளில் உறுதி எடுப்போம்.**

**வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் அவர்கள் புகழ்!
ஓங்குக புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கீர்த்தி!
தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி!**

**பொருளாதார வலிமை மிக்க
தமிழ்நாட்டை உருவாக்கி
ஒற்றுமையான பாரதத்தை படைப்போம்!**

**நன்றி! வணக்கம்!**

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**